# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:-திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05-ம் நாள் வியாழக்கிழமை

***இடைமனு எண். 48/2021 in அசல் வழக்கு எண்: 3/2018***

1. கோவிந்தசாமி (இறந்தார்)
2. வீராசாமி .... மனுதாரர்கள்/வாதி மற்றும் Proposed party

/எதிர்/

1. கடலூர் மாவட்ட ஆட்சியர்
2. சிதம்பரம் தாலுக்கா வட்டாட்சியர்
3. மஹாதேவன் (இறந்தார்)
4. ராதாகிருஷ்ணன்
5. வைத்தியநாதசாமி
6. தெய்வநாயகம்
7. அரிஹரன்
8. சற்குணாம்பாள்
9. சுமதி
10. சாந்தி
11. நவீன்ராஜ் ….. எதிர்மனுதாரர்கள்/1 முதல் 11 பிரதிவாதிகள்/ 12 முதல் 17 Proposed பார்ட்டிகள்

மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 04.08.2021-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.கலியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1, 2, 5, 7 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் இறந்தும், 4, 6, 10, 11ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஞானசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

மனுவில் கண்டவாறு அசல் வழக்கில் திருத்தம் செய்யக் கோரி, உரிமையியல் நடைமுறை சட்டம் 6 விதி 17ன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனு.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் 2ம் மனுதாரர் என்றும், Proposed பார்ட்டி 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள். பிரதிவாதிகள். 1 முதல் 6, 7 முதல் 11 எதிர்மனுதாரர்கள் என்றும், தன் தகப்பனார் வாதி/கோவிந்தசாமி, தாவாவில் கண்ட சொத்துக்களை பொறுத்து தாவாவில் கண்டபடி பரிகாரம் கேட்டிருந்ததாகவும், பிராதில் கண்ட அம்சங்களையும் இதன் ஒரு அம்சமாக பாவிக்க வேண்டுகிறார் என்றும், வாதி கோவிந்தசாமி தனக்கு 02.03.2017-ல் ஒரு பதிவாகாத உயில் எழுதி வைத்த தாவா சொத்து பூராவையும் அவர் காலமானவுடன் தான் அடையும்படி எழுதி வைத்ததாகவும், அது உண்மையான இறுதியாக எழுதிவைக்கப்பட்ட உயில் என்றும், கோவிந்தசாமி இறந்தபின் உயில் அமுலுக்கு வந்து உயிலில் கண்ட சொத்துக்கள் தனக்கு பாத்யமாகிவிட்டதாகவும், ஆகவே மேற்படி உயிலின் அடிப்படையில் 2ம் மனுதாரரை கோவிந்தசாமியின் வாரிசாக சேர்க்க IA.No.408/2019ல் மனு போட்டு இருந்ததாகவும், அதில் 7 முதல் 11 எதிர்மனுதாரர்களை சேர்த்து IA.No.408/2019 தாக்கல் செய்து இருந்ததாகவும், அது 18.12.2020-ல் அனுமதிக்கப்பட்டதாகவும், அதன் பேரில் Consequential-ஆக பிராதினை திருத்துவதற்கு இந்த திருத்தல் மனு தாக்கல் செய்வதாகவும், எனவே மனுவில் கண்ட விவரப்படி அசல் வழக்குரையில் திருத்தம் செய்துகொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவு செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 4, 6, 10, 11-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ள 02.03.2017ல் பதிவு செய்யப்படாமல் உயில் எழுதி வைத்ததாகவும், அதன் அடிப்படையில் 2ம் வாதியாக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சொல்லி உள்ளார் என்றும், அந்த உயில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத பட்சத்தில் இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், தள்ளுபடிக்கு உகந்தது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ளள அபிடவிட்டில் சொல்லப்பட்ட 02.03.2017ந் தேதியிட்ட பதிவு செய்யப்படாத உயில் என்றும், அந்த உயில் உண்மையானதும் அல்ல என்றும், அந்த உயிலின் நகலை இந்த எதிர்மனுதாரருக்கு வழங்கப்பவில்லை என்றும், நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றும், கோவிந்தசாமி 2ம் மனுதாரருக்கு மட்டும் உயில் எழுதி வைக்க வேண்டிய அவசியமில்லை என்றும், வாதி உடல் நலம் சரியில்லாத நிலையில் அது போஜரியாக தயாரிக்கப்பட்ட உயில் என்றும், IA.No.408/2019 மனுவில் 7 முதல் 11 நபர்களை 7 முதல் 11 பிரதிவாதியாக சேர்க்க வேண்டும் என்றும் மனு கொடுத்துள்ளதாகவும், ஆனால் இந்த மனுவில் 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை இந்த

மனுவில் எந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியவில்லை என்றும், இறந்து போன 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் தான் 12 முதல் 17 எதிர்மனுதாரர்கள் ஆவார்கள் என்றும், இறந்து போன 3ம் பிரதிவாதி வாரிசுதாரர்களை சேர்க்க IA.No.53/2021 என மனு கொடுத்தும் 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை சேர்ப்பதில் ஏற்பட்ட abatement-யை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்த மனு IA.No.52/2021 என நம்பராகி நிலுவையில் இருக்கும் போது IA.No.48/2021 மனுவில் 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை எந்த அடிப்படையில் சேர்க்கபட்டது என்ற விபரம் தெரிவிக்கவில்லை என்றும், IA.No.408/2019 மனுவும் நிலுவையில் இல்லாத பட்சத்தில் இந்த மனுவை ஏற்றுக் கொள்ள எந்தவித முகாந்திரமும் கிடையாது என்றும், IA.No.48/2021 மனு அனுமதிக்கப்பட்ட பின்பு தான் IA.No.408/2019 மனுவில் 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை/12 முதல் 17 பிரதிவாதிகளாக சேர்த்த பின்பு தான் அனுமதிக்கப்பட் டிருக்க வேண்டும் என்றும், ஆனால் 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை சேர்க்கப்படாமல் IA.No.408/2019 மனு 18.12.2020ல் அனுமதிக்கப்பட்டு இருப்பது சரியல்ல என்றும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**5. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6. மனுவினை பொறுத்தவரையில் அசல் வழக்கு விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி கோவிந்தசாமி 2ம் மனுதாரருக்கு 02.03.2017-ல் ஒரு பதிவாகாத உயில் எழுதி வைத்து தாவா சொத்து பூராவையும் அவர் காலமானவுடன் தான் அடையும்படி எழுதி வைத்ததாகவும், கோவிந்தசாமி இறந்தபின் உயில் அமுலுக்கு வந்து உயிலில் கண்ட சொத்துக்கள் 2ம் மனுதாரருக்கு பாத்யமாகிவிட்டதாகவும், ஆகவே மேற்படி உயிலின் அடிப்படையில் 2ம் மனுதாரரை கோவிந்தசாமியின் வாரிசாக சேர்க்க IA.No.408/2019ல் மனு போட்டு இருந்ததாகவும், அதில் 7 முதல் 11 எதிர்மனுதாரர்களை formal-ஆக சேர்த்து இருந்ததாகவும், IA.No.408/2019, 18.12.2020-ல் அனுமதிக்கப்பட்டதாகவும், அதன் பேரில் Consequential-ஆக பிராதினை திருத்துவதற்கு இந்த திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் எதிருரையில் ”*வாதி கோவிந்தசாமி உடல் நலம்*

*சரியில்லாத நிலையில் உயில் போஜரியாக தயாரிக்கப்பட்டது என்றும், IA.No.408/2019 மனுவில் 7 முதல் 11 நபர்களை 7 முதல் 11 பிரதிவாதியாக சேர்க்க வேண்டும் என்றும் மனு கொடுத்துள்ளதாகவும், ஆனால் இந்த மனுவில் 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை இந்த மனுவில் எந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியவில்லை என்றும், இறந்து போன 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் தான் 12 முதல் 17 எதிர்மனுதாரர்கள் ஆவார்கள் என்றும், இறந்து போன 3ம் பிரதிவாதி வாரிசுதாரர்களை சேர்க்க IA.No.53/2021 என மனு கொடுத்தும் 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை சேர்ப்பதில் ஏற்பட்ட abatement-யை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்த மனு IA.No.52/2021 என நம்பராகி நிலுவையில் இருக்கும் போது IA.No.48/2021 மனுவில் 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை எந்த அடிப்படையில் சேர்க்கபட்டது என்ற விபரம் தெரிவிக்கவில்லை என்றும், IA.No.408/2019 மனுவும் நிலுவையில் இல்லாத பட்சத்தில் இந்த மனுவை ஏற்றுக் கொள்ள எந்தவித முகாந்திரமும் கிடையாது என்றும், IA.No.48/2021 மனு அனுமதிக்கப்பட்ட பின்பு தான் IA.No.408/2019 மனுவில் 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை/12 முதல் 17 பிரதிவாதிகளாக சேர்த்த பின்பு தான் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஆனால் 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை சேர்க்கப்படாமல் IA.No.408/2019 மனு 18.12.2020ல் அனுமதிக்கப்பட்டு இருப்பது சரியல்ல்"* என ஆட்சேபித்திருந்தாலும் இறந்த 1ம் மனுதாரரின் வாரிசாக 2ம் மனுதாரரை சேர்க்க கோரியே *IA.No.408/2019* ஐ தாக்கல் செய்துள்ளார். 2ம் மனுதாரரை சேர்க்க கோரிய அம்மனு அனுமதிக்கப்பட்டதை பிராதில் திருத்தம் செய்ய வேண்டியே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவினை நிராகரிப்பதற்கு உரிய போதுமான காரணங்களை குறிப்பிட்டு எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்குரையை திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, மனுதாரர்கள் தாக்கல் செய்த இந்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்ல அவரால் உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-.V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.